**சிரிக்குது செவ்வந்தி**



காந்தி கிராமம் பகுதியைச் சேர்ந்த வேலுமணி அவர்கள் பத்து ஆண்டுகளாக செவ்வந்திப் பூ விவசாயத்தில் கோலோச்சிக் கொண்டிருப்பவர். இவர் செவ்வந்தி பூ சாகுபடியைப் பற்றி கூறுகையில் “இந்தப் பகுதியில் மருகு, கோழிக்கொண்டை, செவ்வந்தின்னு பல வகைப் பூ சாகுபடி நடக்குது. வெங்காயம், கீரை மாதிரியான பயிர்களையும் பருவத்துக்குத் தக்கபடி மாத்தி மாத்தி செய்றோம்”.பூவைப் பொறுத்தவரை ஐப்பசி, கார்த்திகை மாசத்துல செவ்வந்திப் பூவுக்கு தேவை அதிகமாயிருக்கும். நல்ல விலையும் கிடைக்கும். சித்திரையில் செடி நட்டா, ஐப்பசியில அறுவடை செய்ய முடியும்.மஞ்சள் செவ்வந்தி, வெள்ளை செவ்வந்தி, சின்ன செவ்வந்தி (இதுவும் மஞ்சளாக இருக்கும்) மூணு வகை இருக்கு. இந்தப் பகுதியைப் பொறுத்தவரைக்கும் பரவலாக வெள்ளையும், மஞ்சளும் தான் பயிர் செய்றோம். நடவுசெய்த ஏழு மாசத்துல அறுப்புக்கு வந்துடும். வாரம் ஒரு தடவை வீதம் அஞ்சு இல்லன்னா ஆறு தடவை பூ எடுக்கலாம். மொத்தம் எட்டு மாச சாகுபடி, ஒரு தடவைக்கு 800 கிலோ கிடைக்கும்.

ஏக்கருக்கு கணக்குப் பார்த்தா, சராசரியாக 4,000 முதல் 4,500 கிலோ வரை பூ கிடைக்கும். சந்தையில இருக்கிற பூக்களின் வரத்தைப் பொறுத்து கிலோ பத்து ரூபாயிலிருந்து ஐம்பது ரூபாய் வரைக்கும் விலை போகும்.சராசரி மகசூல் நாலாயிரம் கிலோ சராசரி விலை கிலோ 25 ரூபாய் அப்படின்னு கணக்குப் போட்டாலே, ஒரு லட்ச ரூபாய் வரை கிடைக்கும்.பெரிய (மஞ்சள்) செவ்வந்தியை வேர் மூலமாகத்தான் உற்பத்தி செய்யவேண்டும். கரிசல் மண் தவிர மற்ற எல்லா வகை மண்ணிலும் செவ்வந்தி நன்றாக வளரும். நாற்றுக்காக விட்டிருக்கும் பாத்தியில இருக்கும் செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சி, தழையவிட்டு, அந்தச் செடிகளின் மேல் கட்டையை நீக்கி, வேரை மட்டும் வெட்டி எடுக்கவேண்டும் அவற்றை இரண்டு கைப்பிடி அளவு எடுத்து, சிறு சிறு கட்டுகளாக கட்டிக்கொள்ளவேண்டும். ஏக்கருக்கு நானூறு முதல் நானூற்று ஐம்பது கட்டுகள் வரை தேவைப்படும்.

நிலத்தை நன்கு உழவு செய்து, வெங்காய பாத்திபோல அமைத்து, நாலு விரல் இடைவெளி இருப்பது போல் இரண்டு இரண்டு வேர்களாக வரிசையில் நடவேண்டும். வேர்களை நடும் போது, அடிவேர், நுனிவேர் பார்த்து ஜாக்கிரதையாக நடவேண்டும். அடிவேரைப் பார்த்து நிலத்தில் நடவேண்டும் மாற்றி நடவு செய்தால், செடிகள் வளராது.நாற்பது நாள் இடைவெளியில் மொத்தம் மூன்று தடவை களை எடுக்கவேண்டும். வாரத்துக்கு இரண்டு தடவை தண்ணீர் கொடுக்கவேண்டும். முதல் தடவை களை எடுப்பதற்கு 20 ஆட்களும், அடுத்தடுத்த இரண்டு களைகளுக்கு 15 ஆட்கள் வீதமும் மொத்தம் 50 ஆட்களுக்கு வேலை இருக்கும். களையெடுத்த பிறகு இரண்டு மூட்டை டிஏபி இத்துடன் நூறு கிலோ

கடலைப் பிண்ணாக்கு கொடுக்கவேண்டும்.பூ வெடிக்கும் சமயத்தில் செடி கீழே சாய்வதற்கு வாய்ப்பு இருக்கும். அதைத் தடுக்க, செடிகளுக்கு மண் அணைப்பதோடு, அருகில் சிறு குச்சிகளை நட்டு, அவற்றில் கயிறு மூலம் கட்டிவிடுவது அவசியம்.

அசுவினி, வெள்ளை ஈ இரண்டும் தாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகம். இதற்கு மோனோகு ரோட்டோபாஸ், செவின் பவுடர் ஆகியவற்றைச் சேர்த்து அடிக்கவேண்டும். மழை அதிகமாக இருந்தால் செடிகள் கீழே சாய்ந்து விடும். எல்லாவற்றையும் சமாளித்து முடித்தால் நல்ல அறுவடை தான்.சித்திரையில் விதைப்பவர்கள், ஊடுபயிராக வெங்காயத்தையும் சேர்த்து விதைப்பார்கள். ஒரு வரிசையில் செவ்வந்தி, அடுத்த வரிசையில் வெங்காயம் என விதைப்பார்கள். 45ம் நாளில் வெங்காயம் அறுவடை ஆகிவிடும். இதன் மூலம் செலவு போக ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கும்.

**நீர்க்கருகல் ஜாக்கிரதை**

செவ்வந்தி தோட்டத்தில் தண்ணீர் தேங்குவது ஆபத்தானது. அப்படித் தேங்கி நின்றால் நீர்க்கருகல் நோய்த் தாக்கும். கீழிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இலை அழுக ஆரம்பித்து, முழுச்செடியும் அழுகிவிடும். அதனால் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.மற்ற செவ்வந்தி பூக்களைவிட, வெள்ளை செவ்வந்திக்கு மழை ஆகாது. மழையைப் பொறுத்து கிடைத்தவரை லாபம் என்று முன்கூட்டியே அறுவடை செய்துவிடவேண்டும். இல்லையென்றால் முதலுக்கே மோசம் வந்துவிடும். இந்தக் காரணத்தால் தான், வெள்ளை செவ்வந்தி சாகுபடி குறைந்த அளவில் நடக்கிறது.

**ஒரு ஏக்கருக்கான செவ்வந்தி சாகுபடி செலவு - வரவு கணக்கு (ரூபாயில்)**

| **விவரம்** | **செலவு** | **வரவு** |
|---|---|---|
| உழவு | 1,500 | |
| தொழு உரம் | 1,200 | |
| பார் அமைத்தல் | 1,000 | |
| நாற்று (வேர் வெட்டுதல், வேர் நீக்குதல் உட்பட) | 1,180 | |
| தண்ணீர் பாய்ச்சும் கூலி (மாதம் ரூ. 1,000 வீதம் ஏழு மாதத்துக்கு) | 7,000 | |
| நடவு | 1,200 | |
| களை எடுக்க | 3,000 | |
| உரம் இரண்டு தடவை (டிஏபி கடலை புண்ணாக்கு) | 2,700 | |
| பூச்சி மருந்து (தெளிப்புச் செலவு உட்பட) | 850 | |
| இதரச் செலவுகள் | 750 | |
| பூ விற்பனை மூலம் வரவு | | 70,000 |
| **மொத்தம்** | 20,380 | 70,000 |
| **நிகர லாபம்** | | 49,620 |